# இல்லம்

## செய்தி மடல்

**VOLUME O1 ISSUE 2006/2 APRIL 2006– JUNE 2006**

# உலக வங்கியின் இலங்கைக்கான வதிவிடப்பிரதிநிதி பீற்றர் சீ ஹரல்டின் திருகோணமலை விஜயம்

உலக வங்கியின் இலங்கைக்கான வதிவிடப்பிரதிநிதி பீற்றர் சீ ஹரல்ட் 2006 மார்ச் மாதம் 21,22 ஆம் திகதிகளில் திருகோணமலை மாவட்டத்திற்கு விஜயம் செய்தார். வடக்கு கிழக்கு மாகாணத்தில் யுத்தத்தினால் அழிவடைந்துபோன 326000 வீடுகளில் 31,270 வீடுகள் மீள்நிர்மாணம் செய்வதற்கு உலக வங்கியின் நிதியுதவியுடன் வடக்கு கிழக்கு வீடமைப்பு மீள்நிர்மாணத்திட்டம் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. திருகோணமலை மாவட்டத்தில் இத்திட்டத்தின் கீழ் இடம்பெற்றுவரும் வீடமைப்பு மீள்நிர்மாணப் பணிகளை அவதானிப்பதற்காகவே பீற்றர் சீ ஹரல்ட் திருகோணமலை மாவட்டத்திற்கு விஜயம் செய்திருந்தார்.

21ஆம் திகதியன்று காலை கிண்ணியா பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள ஆயிலடி கிராமத்திற்கு, திட்டப்பணிப்பாளர் செ.பத்மநாதன், திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் கே.ஜீ.லீலானந்தா சகிதம் வருகை தந்த பீற்றர் சீ ஹரல்டிற்கு அக் கிராமத்தைச் சேர்ந்த முஸ்லிம் மக்கள் தமது பாரம்பரிய முறைகளின்படி அமோக வரவேற்பளித்தனர். 2005 ஆம் ஆண்டு இத் திட்டத்தின் கீழ் மீள்நிர்மாணம் செய்யப்பட்ட 20 வீடுகளில் சிலவற்றை அவர் அங்கு திறந்துவைத்தார்.

இதனையடுத்து தம்பலகாமம் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள முள்ளிப்பொத்தானை (9 ஆவது கொலனி) கிராமத்திற்கு விஜயம் செய்த பீற்றர் சீ ஹரல்ட் அங்கு 2005 ஆம் ஆண்டு இத் திட்டத்தின் கீழ் மீள்நிர்மாணம் செய்யப்பட்ட வீடுகளைத் திறந்து வைத்தார்.

மாலையில் திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள வரோதயநகர் நீர்விநியோகத்திட்டத்தினை அவர் ஆரம்பித்து வைத்தார். அதே தினத்தில் சாம்பல்தீவு கிராமத்திற்குச் சென்று 2005 ஆம் ஆண்டில் அக் கிராமத்தில் மீள்நிர்மாணம் செய்யப்பட்ட வீடுகளைத் திறந்து வைத்தார்.

22ம் திகதியன்று மொறவெவ பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள விஹாரகம மற்றும் சுவர்ண ஜெயந்திபுர கிராமங்களில் இத்திட்டத்தின் கீழ் மீள்நிர்மாணம் செய்யப்பட்ட வீடுகளைத் திறந்து வைத்தார். அதே தினத்தில் ஒளவைநகரில் 2006 ஆம் ஆண்டில் மீள்நிர்மாணம் செய்யப்பட்டவிருக்கும் 225 வீடுகளுக்கான அடிக்கல்லை அவர் நாட்டினார்.

பீற்றர் சீ ஹரல்டின் விஜயத்தின் போது இத் திட்டத்தின்மூலம் பயன்பெறும் தமிழ், சிங்கள, முஸ்லிம் சமூகங்களைச் சேர்ந்த மூவின மக்களும் அவருக்குத் தமது இதயபூர்வமான வாழ்த்துக்களையும் நன்றிகளையும் தெரிவித்துக்கொண்டனர். தத்தமது இனத்திற்கும் சமூகத்திற்கும் உரித்தான பாரம்பரிய முறைகளின்படி மக்கள் அவரை வரவேற்றமை அவரை வெகுவாகக் கவர்ந்திருந்தது.



பொங்கியெழும் மக்களின் ஆர்வத்தையும், நன்றியுணர்வையும் அவர்களின் சாதனைகளையும் நேரிற் கண்ட பீற்றர் சீ ஹரல்ட் மக்களுக்குத் தமது திருப்தியையும் மகிழ்ச்சியையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொண்டார். சாம்பல்தீவில் இடம்பெற்ற வரவேற்புக் கூட்டத்தில் உரையாற்றிய பீற்றர் சீ ஹரல்ட்,

“யுத்தத்தினால் தனது வீட்டினை இழந்த கடைசி மனிதனுக்கான வீட்டினை மீள்நிர்மாணித்துத்தரும் வரை உலக வங்கி ஓயப்போவதில்லை” எனக் கூறியபோது மக்கள் ஆரவாரம் செய்து தமது மகிழ்ச்சியைத் தெரிவித்தனர்.

பீற்றர் சீ ஹரல்டின் திருகோணமலை விஜயம் மிகக்காத்திரமான பெறுபேற்றினை இத் திட்டத்திற்குத் தேடித்தந்துள்ளது. உலக வங்கி வழங்கிய நிதி உதவியான 75 மில்லியன் அமெரிக்க டொலருக்கு மேலதிகமாக வடக்கு கிழக்கு வீடமைப்பு மீள்நிர்மாணத்திட்டப் பணிகளுக்காக ஐரோப்பிய ஆணைக்குழு 06 மில்லியன் யூரோக்களை வழங்க முன்வந்தமை இந்தத் திட்டத்தின் எதிர்கால சாதனைகளுக்குக் கட்டியம் கூறுவதாக அமைந்துள்ளது.

### பீற்றர் சீ ஹரல்டுக்கு பிரியாவிடை

வடக்கு கிழக்கின் சமூக அபிவிருத்திப்பணிகளில் பெரும் அக்கறையுடன் செயற்பட்டுவந்தவரான உலக வங்கியின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி பீற்றர் சீ. ஹரல்ட் அவர்களுக்கு வடக்கு கிழக்கு மக்களின் சார்பில் வடக்கு கிழக்கு வீடமைப்பு மீள்நிர்மாணத்திட்டம் தனது உளம் கனிந்த பிரியாவிடையை வழங்குகின்றது.

இதேவேளை உலகவங்கியின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதியாக நியமனம் பெற்றுவரும் நஆகோ இஷ்ஷி அவர்களை வடக்கு கிழக்கு வீடமைப்பு மீள்நிர்மாணத்திட்டம் பெருமையுடன் வரவேற்கின்றது.

### ஐரோப்பிய ஆணைக்குழுவும் இணைந்தது

தேச நிர்மாணம் மற்றும் அபிவிருத்தி அமைச்சு, உலக வங்கி, வடக்கு கிழக்கு மாகாணசபை, வடக்கு கிழக்கு வீடமைப்பு மீள்நிர்மாணத்திட்டம் ஆகியவற்றை உள்ளடக்கிய அபிவிருத்திக் குடும்பத்துடன் தற்போது ஐரோப்பிய ஆணைக்குழுவும் தன்னை இணைத்துக்கொண்டுள்ளது. வடக்கு கிழக்கில் உள்ள 8 மாவட்டங்களிலும் யுத்தத்தினால் அழிவுற்ற வீடுகளை மீள்நிர்மாணம் செய்வதற்காக ஐரோப்பிய ஆணைக்குழு 6 மில்லியன் யூரோக்களை கூட்டு முதலீடாக வழங்கியுள்ளது. இந்த நிதியைக் கொண்டு இந்த ஆண்டிலிருந்து அடுத்துவரும் நான்கு ஆண்டு காலப்பகுதிக்குள் 3514 வீடுகள் நிர்மாணிக்கப்படவுள்ளன. ஐரோப்பிய ஆணைக்குழு நன்கொடையாக வழங்கியுள்ள இந்த நிதி உதவி மேலும் அதிகரிக்கப்படலாமென எதிர்பார்க்கப்படுகின்றது.

## அம்பாறை மாவட்டத்தில் கட்டம் -II ன் நிர்மாணப் பணிகள் துரிதகதியில்

(ஜனாப் எஸ். அன்வர்டீன் - பிரதித் திட்டப் பணிப்பாளர், வடக்கு கிழக்கு வீடமைப்பு மீள்நிர்மாணத்திட்டம்)

கடந்த மூன்று தசாப்தங்களாக இடம்பெற்ற இன வன்முறைகளின் போது அம்பாறை மாவட்டத்தில் 11342 வீடுகள் சேதமடைந்திருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது. அவற்றில் வடக்கு கிழக்கு வீடமைப்பு மீள்நிர்மாணத்திட்டத்தின் மூலம் 2809 வீடுகளை நான்கு ஆண்டு காலப் பகுதியில் மீள்நிர்மாணம் செய்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அத்துடன் கணிசமான வீடுகள் வேறு திட்டங்கள் மூலமும் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. கட்டம் - I கீழ் 2005ம் ஆண்டு 7 பிரதேச செயலக பிரிவிலுள்ள 11 கிராமங்களில் 300 வீடுகள் வடக்கு கிழக்கு வீடமைப்பு மீள் நிர்மாணத் திட்டத்தினால் மீள் நிர்மாணிக்கப்பட்டிருந்தன.

வடக்கு கிழக்கு வீடமைப்பு மீள் நிர்மாணத்திட்டத்தின் கட்டம் II ற்காக 13 பிரதேச செயலக பிரிவிலிருந்து 37 கிராமங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. அக் கிராமங்களில் வசித்து வருகின்ற 779 குடும்பங்கள் சேத மதிப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டன. 23.02.2006 ஆம் திகதியன்று அம்பாறை மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற மாவட்ட வீடமைப்பு மீள்நிர்மாணக் குழு கூட்டத்தின் போது தீர்மானிக்கப்பட்ட தகைமைப் புள்ளியின் அடிப்படையில், மதிப்பாய்வு செய்யப் பட்ட குடும்பங்களிலிருந்து 132 குடும்பங்களின் பெயர்கள் தெரிவுசெய்யப்பட்டன. தெரிவுசெய்யப்பட்டவர்களின் பெயர்ப்பட்டியல் கிராமங்கள் தோறும் வெளியிடப்பட்டன. "குறைகோள் அணுகுமுறை" நடவடிக்கையின் இறுதியில், வீடமைப்பு நன்கொடை பெறுவதற்காக 3 கிராமங்களிலிருந்து 1000 பயனாளிகள் தெரிவுசெய்யப்பட்டனர்.

மூவின மக்கள் வாழும் அம்பாறை மாவட்டத்தில் நன்மை பெறும் பயனாளிகளைத் தெரிவு செய்யும்போது, திட்ட அடிப்படையிலிருந்து வழுவாது மூவின மக்களும் பாதிப்படையாத விதத்தில் வாய்ப்பு வழங்கப்பட வேண்டும் என்ற விடயம் மிக அவதானமாக நோக்கப்பட்டது. இரண்டாம் கட்ட செயற்படத்தலுக்காக, போரினால் பாதிக்கப்பட்ட சிங்கள மக்கள் வாழும் 06 கிராமங்களும் முஸ்லிம் மக்கள் வாழும் 10 கிராமங்களும் தமிழ் மக்கள் வாழும் 21 கிராமங்களும் தெரிவு செய்யப்பட்டன. இதற்கு மேலதிகமாக மங்களகம எனும் கிராமமும் விஷேட கிராமமாக தெரிவு செய்யப்பட்டது. இக் கிராமம் அடிப்படையில் மட்டக்களப்பு மாவட்ட நிர்வாக எல்லைக்கு உட்பட்டதாயினும் நிர்வாக வசதியின்பொருட்டு தற்காலிகமாக அம்பாறை மாவட்ட நிர்வாகத்தின் கிழ் இணைக்கப்பட்டுள்ளது.



போரினால் இக்கிராமம் பாதிக்கப்பட்டிருந்த போதிலும் இக்கிராமத்திற்கான வீட்டு நிர்மாணப் பணிகள் எதுவும் இதற்கு முன்னர் முன்னெடுக்கப்படவில்லை என்பது கண்டு கொள்ளப்பட்டது. மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபரின் இணக்கப்பாட்டுடன் கட்டம் - II ன் கீழ் இக்கிராமம் தெரிவு செய்யப்பட்டு தற்போது அங்கு 74 வீடுகள் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன.

இரண்டாம் கட்டத்தின் கீழ் இந்த ஆண்டில் தெரிவு செய்யப்பட்டுள்ள 1000 குடும்பங்களில் 50 தமிழ் குடும்பங்களும் 300 முஸ்லிம் குடும்பங்களும் 195 சிங்கள குடும்பங்களும் வீடமைப்பு நன்கொடையினைப் பெற்று வீட்டு நிர்மாணப்பணிகளை மேற்கொண்டு வருகின்றன.

கட்டம் இரண்டின் கீழ் கிராமங்கள் தோறும் மேற்கொள்ளப்பட்டுவரும் வீடமைப்பு மீள்நிர்மாணத் திட்டத்தின் நடவடிக்கைகள் பற்றிய விழிப்பணர்வுப் பிரசாரம் காரணமாக கிராம மக்கள் கணிசமான வழிப்புணர்வைப் பெற்றுள்ளனர். அத்துடன் வீட்டு நிர்மாணப் பணிகளில் குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் மிகுந்த ஈடுபாடு காட்டி வருகின்றனர். வீட்டு நிர்மாணத்திற்கான கட்டிடப் பொருட்கள் கொள்வனவில் கிராம மக்கள் குழுக்களாக செயற்படுவதனால் நிர்மாணப் பணிகள் மிகவேகமாக நடைபெற்று வருகின்றன. இதனால் மழைக் காலம் ஆரம்பிப்பதன் முன்னர் மக்கள் தங்கள் வீட்டுநிர்மாணப் பணிகளைப் பூர்த்திசெய்து, குடியமர்ந்து விடுவர் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## இடம்பெயர்ந்த முஸ்லிம் குடும்பங்களுக்கு உலக வங்கியின் நிதிஉதவியின் கீழ் புதியதோர் வீடைமைப்புத் திட்டம்




1991 ம் ஆண்டு வடபகுதியிலிருந்து இடம்பெயர்ந்து புத்தளம் மாவட்டத்தில் குடியேறிய முஸ்லிம் குடும்பங்களக்கான வதிவிடத் தேவையை ஈடுசெய்வதற்காக வடக்கு கிழக்கு வீடமைப்பு மீள்நிர்மாணத் திட்டத்தின் உப திட்டம் ஒன்று புத்தளம் மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதன்படி 7,700 வீடுகளை மீள் நிர்மாணம் செய்வதற்கு உலக வங்கியுடன் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் தூதுவராலயம் (UNHCR), ஐக்கிய நாடுகளின் சிறுவர்பாதுகாப்பு நிதியம்(UNICEF), ஐக்கிய நாடுகளின் சுற்றுச்சூழல் திட்டம் (UN Habitat) ஆகிய நிறுவனங்கள் இணைந்து நீர் விநியோகம், பாதை அமைப்பு போன்ற சமூக நலனோம்பு பணிகளையும் மேற்கொள்வதற்கு முன்வந்துள்ளன. இத்திட்டம் வடக்கு கிழக்கு மீள்நிர்மாணத்திட்டத்தின் ஓர் உப திட்டமாகும்.

இதற்கான திட்ட அலுவலகம் புத்தளம் மாவட்டச் செயலகத்தில் அமைக்கப்பட்டுள்ளது. திட்டப்பணிப்பாளராக பொறியியலாளர், ஜனாப்.எஸ்.எம். யாசின் நியமிக்கப்பட்டுள்ளார்.

## மட்டக்களப்பு மாவட்டத்தில் இடம்பெயர்ந்த மக்களுக்கான புதிய திட்டம்

மட்டக்களப்பு மாவட்டத்தில் வன்செயல் காரணமாக இடம்பெயர்ந்த, தமது சொந்த இடத்தில் மீள் குடியமர முடியாது வேறு காணிகளில் குடியேறியுள்ள குடும்பங்களக்கு மாற்று வீடமைப்பு வசதிகளைப் செய்வதற்கான ஆரம்பக் கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த உத்தேச திட்டத்திற்கான நிதியுதவியை உலக வங்கியிடமிருந்து பெறுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## தொழில் திறன் பயிற்சி 30.06.2006 இல் உள்ளபடி



## தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளின் தொகை (திருத்தியமைக்கப்பட்டது) கட்டம் II

| மாவட்டம் | கட்டம் II | | | |
|---|---|---|---|---|
| | ஆரம்ப ஒதுக்கீடு | திருத்தியமைக்கப்பட்டது | | |
| | | IDA | EC | மொத்தம் |
| யாழ்ப்பாணம் | 4,000 | 2,775 | 225 | 3,000 |
| கிளிநொச்சி | 1,500 | 1,390 | 110 | 1,500 |
| முல்லைத்தீவு | 1,000 | 366 | 34 | 400 |
| வவுனியா | 1,000 | 368 | 32 | 400 |
| மன்னார் | 1,000 | 368 | 32 | 400 |
| திருகோணமலை | 2,000 | 1,620 | 130 | 1,750 |
| மட்டக்களப்பு | 2,000 | 2,550 | 200 | 2,750 |
| அம்பாறை | 1,000 | 920 | 80 | 1,000 |
| மொத்தம் | 13,500 | 10,357 | 843 | 11,200 |

IDA – சர்வதேச அபிவிருத்தி நிறுவனம்
EC - ஐரோப்பிய ஆணைக்குழு

## துரித காணிச் செயலணி நடவடிக்கை ~ 31.04.2006 இல் உள்ளபடி

| தொ இல | மாவட்டம் | முறைபீடுகள் எண்ணிக்கை | விசாரிக்கப்பட்ட முறைபீடுகள் | விசாரிக்கப்பட்ட முறைபீடுகள் சதவீதத்தில் | தீர்வுகாணப்பட்ட முறைபீடுகள் வழங்கப்பட்ட உத்தரவுப் பத்திரங்கள் | உண்மையான முன்னேற்றம் சதவீதத்தில் | விசாரிக்கப்பட்டவை இன்னும் செயன்முறைக்கு உட்பட்டவை |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | அம்பாறை | 13,382 | 10,193 | 76 | 5,465 | 40 | 4,728 |
| 02 | கிளிநொச்சி | 19,157 | 15,160 | 76 | 15,160 | 100 | - |
| 03 | முல்லைத்தீவு | 19,618 | 12,802 | 65 | 6,203 | 31 | 6,599 |
| 04 | வவுனியா | 9,189 | 7,656 | 83 | 4,093 | 44 | 3,563 |
| 05 | மன்னார் | 5,646 | 4,343 | 75 | 3,697 | 65 | 646 |
| 06 | திருகோணமலை | 10,785 | 8,814 | 82 | 6,365 | 59 | 2,449 |
| 07 | மட்டக்களப்பு | 12,724 | 9,768 | 76 | 7,730 | 60 | 2,038 |
| 08 | யாழ்ப்பாணம் | 5,884 | 4,739 | 80 | 4,008 | 68 | 731 |
| மொத்தம் | | 96,385 | 73,475 | 71 | 52,721 | 72 | 20,754 |

## அதிசயம் ஆனால் உண்மை!

## ஒரு சிறு குடிலில் உயிர்வாழும் ஐந்து தலைமுறைகள்.



திருகோணமலை மாவட்டம் குச்சவெளி பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ளது பழமை வாய்ந்த கும்புறுப்பிட்டி (வடக்கு) கிராமம். இந்தக் கிராமத்தில் வசிக்கும் கௌரிதேவி செல்வராசா என்பவருக்கு வடக்கு கிழக்கு வீடமைப்பு மீள்நிர்மாணத்திட்டத்தின் கீழ் வீடு மீள்நிர்மாணத்துக்கான உதவி கிடைத்துள்ளது. அவரை அண்மையில் அவரது வீட்டில் சந்தித்த போது அந்த அதிசயத் தகவல் எமக்கு கிடைத்தது.

அவர் வாழுகின்ற சிறு குடிலில் "ஐந்து தலைமுறையைச் சேர்ந்தவர்கள் உயிர்வாழ்கின்றனர். கௌரிதேவி அவரது அம்மா, அம்மம்மா, மகள், பேரன் ஆகியோரே இந்த ஐந்து தலைமுறை யினராவர். கௌரிதேவிக்கு இப்பொழுது 58 வயதாகிறது. அவரது தாயாருக்கு 73 வயது. அம்மம்மாவுக்கு 87வயது. மகளுக்கு 17 வயது. பேரனுக்கு வயது 1½.இந்தக் கூட்டுக்குடும்பம் சந்தோசமாகத்தான் காணப்படுகிறது. துரதிஸ்டம் 1½ வயதுக் குழந்தையும் அவனது தகப்பனும் மட்டுமே இந்தக்குடும்பத்தில் ஆண்கள். மிகுதி மூன்று தலைமுறை ஆண்களை யுத்தம் காவுகொண்டுவிட்டது.

எங்களைக் கண்டதும் கௌரிதேவி கையெடுத்து வணங்கினார். ஐந்து தலைமுறைகளாக நான்பட்ட இன்னல் கொஞ்ச நஞ்சமன்று. இந்த ஓலைச் சிறுகுடிலில் ஐந்து தலைமுறையினர் வாழ்வதைக் கற்பனை செய்யவும் முடியாது. வெளியே வாய்விட்டுச் சொல்லமுடியாத அவல வாழ்வு வாழ்ந்தேன். இப்பொழுதுதான் எனக்கு விடிவு கிட்டியுள்ளது. வடக்கு கிழக்கு வீடமைப்பு மீள்நிர்மாணத்திடத்தின் கீழ் எனக்கு ஒரு வீடு கிடைத்திருப்பதால் என்னுடைய வாழ்க்கையைப் பீடித்த பெருந்துயர் இனிமேல் தீர்ந்துவிடும். 5 தலைமுறைகளாக ஓலைக்குடிசையில் வாழ்ந்த நாங்கள் கல்வீடொன்றில் வாழப்போகின்றோம் என்ற நினைப்பே எனக்குப் பெருமகிழ்ச்சியைத் தருகின்றது" என அவர் கூறினார்.

### அரிய சந்தர்ப்பம்.!

## இளைஞர் யுவதிகளுக்கான கொடுப்பனவுடன்கூடிய திறன் பயிற்சி

வடக்கு கிழக்கு மாகாணத்தில் தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் பெருமளவிலான கட்டிட நிர்மாணப் பணிகள் காரணமாக மேசன் மற்றும் தச்சுத் தொழிலாளர்களுக்கான தட்டுப்பாடு நிலவுகின்றது. இந்த தொழில்களில் ஈடுபடும் தொழிலாளி ஒருவர் நாளொன்றுக்கு ரூபா 600 தொடக்கம் ரூபா 1200 வரை உழைக்கக்கூடிய வாய்ப்புகள் உள்ளன.



கட்டுமானத் தொழிலாளர் பற்றாக்குறைக்கு தீர்வு காணுமுகமாக வடக்கு கிழக்கு வீடமைப்பு மீள்நிர்மாணத்திட்டம் இளைஞர் யுவதிகளுக்கு மேசன், தச்சுத் தொழில் சார்ந்த திறன் பயிற்சிகளை மாவட்டம் தோறும் வழங்கிவருகிறது. இப்பயிற்சிகள் 3 மாத கால அளவு கொண்டவை. ஆண் பெண் இருபாலாரும் இப் பயிற்சி நெறிகளில் பங்குகொள்ளலாம்.

பயிற்சிக்காலத்தின் போது ஊக்குவிப்புக் கொடுப்பனவாக நாளொன்றுக்கு ரூபா 300-400 வரை இவர்களுக்கு வழங்கப்படுகின்றது. பயிற்சியின் முடிவில் சான்றிதழ்களும் ரூபா 5000/= பெறுமதியான உபகரணங்களும் வழங்கப்படும். இத்தகைய பயிற்சிநெறிகளில் இணைந்து பயிற்சிபெற விரும்பும் இளைஞர் யுவதிகள் உடனடியாக மாவட்ட பிரதித்திட்டப் பணிப்பாளர்களுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.



## அகதி வாழ்வுக்கு ஒரு முற்றுப்புள்ளி !

"1990 ஆம் ஆண்டு யுத்தம் ஆரம்பமானபோது உடுத்த உடையுடன் உயிரைக் கையில் பிடித்தபடி இந்தக்கிராமத்தை (சாம்பல்தீவு) விட்டு நாங்கள் ஓடினோம். கடந்த 10 வருட காலமாக இந்தியாவின் தமிழ்நாட்டிலுள்ள வெள்ளப்பள்ளம், வேதாரணியம், பவானி, கோயம்புத்தூர் போன்ற இடங்களிலுள்ள அகதிமுகாம்களிலே அவலவாழ்வு வாழ்ந்தோம். 2002ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் இடம்பெற்ற யுத்த நிறுத்த உடன்பாட்டைத் தொடர்ந்து கிராமத்திற்கு நாம் திரும்பினோம். கிராமம் காடு மண்டிக் கிடந்தது. வீடுகள் இருந்த இடம் தெரியாது அழிக்கப்பட்டுக் கிடந்தன.நாதியற்றுப்போன நாங்கள் திருகோணமலை கிளப்பன்பேக் அகதிமுகாமில் தங்கவைக்கப்பட்டோம். மீண்டும் இங்கு அகதிவாழ்க்கையே எம்மீது சுமத்தப்பட்டது.

இந்தச் சந்தர்ப்பத்தில்தான் வடக்கு கிழக்கு வீடமைப்பு மீள்நிர்மாணத்திட்டம் இந்தக் கிராமத்திற்கு அறிமுகப்படுத்தப்பட்டது. அழிந்துபோன வீடுகளுக்குப் பதிலாக புதிய வீடுகளை நிர்மாணிப்பதற்கு திட்டம் எங்களுக்கு உதவ முன்வந்தது. மரங்களின் கீழும் வெறும் கிடுகுக் கொட்டகைகளிலும் வசித்துவந்த நாங்கள் தற்போது நிரந்தரமான வசதியான வீடுகளில் குடியிருக்கின்றோம். எங்கள் குடும்பம் நிம்மதியாக வாழ்கின்றது. பிள்ளைகள் வீட்டிலிருந்து ஒழுங்காகப் படிக்கமுடிகின்றது. வ.கி.வீ.மீள்நிர்மாணத் திட்டத்திற்கு நாங்கள் என்றும் நன்றியுடையோம்.

# எனக்கொரு வீடு

**யுத்தம் காரணமாக எனது கிராமத்திலிருந்து நான் இடம்பெயர்ந்திருந்தேன். இப்பொழுதுதான் கிராமத்தில் மீள்குடியமர்ந்துள்ளேன். கிராமத்தில் பயனாளிகள் தெரிவு முடிவடைந்து விட்டது. எனக்கும் வீடு கிடைக்குமா?**

யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்த மக்கள் மீளக்குடியமர்வதனை ஊக்குவிப்பது எங்கள் திட்டத்தின் நோக்கங்களில் ஒன்றாகும். எனவே உங்களைப் போன்று பயனாளி தெரிவின் பின்னர் மீளக் குடியமர்ந்திருப்போர் ஒன்றுசேர்ந்து உங்கள் பிரதேச செயலாளருக்கு விண்ணப்பியுங்கள். உங்கள் விண்ணப்பங்கள் உரிய முறையில் பரிசீலிக்கப்படும்.

**நான் எனது குடும்பத்துடன் 1990 ஆம் ஆண்டு எனது கிராமத்தில் இருந்து இடம்பெயர்ந்திருந்தேன். இப்பொழுது எனது பிள்ளைகள் மூவர் மணம்முடித்த நிலையில் நான்கு குடும்பங்களாக கிராமத்தில் மீள்குடியமர்ந்துள்ளோம். எங்கள் வீடு யுத்தத்தினால் சேதமடைந்துவிட்டது. எங்களுக்கு நான்கு வீடுகள் கட்டுவதற்கு நீங்கள் உதவி செய்வீர்களா?**

இல்லை, அழிந்துபோன வீட்டினை மீள்நிர்மாணம் செய்வதற்கே நாங்கள் உதவி செய்வோம். எனவே ஒரு வீட்டினை மீள்நிர்மாணம் செய்வதற்கு உங்களுக்கு உதவமுடியும். அதுவும் உங்கள் குடும்ப மாத வருமானம் ரூபா 2,500 க்குக் கீழ் இருக்க வேண்டும். குடியிருக்கும் காணிக்கு உரித்தான ஆவணத்தை நீங்கள் கொண்டிருக்க வேண்டும். உங்கள் கிராமம் வீடுமீள்நிர்மாணப் பணிக்காகத் தெரிவுசெய்யப்பட்டிருந்தாலும் தெரிவுசெய்யப்படாதிருந்தாலும் உங்கள் நிலைமையை விளக்கி பிரதேச செயலாளருக்கு விண்ணப்பம் செய்யுங்கள்.

**வீடமைப்பு மீள்நிர்மாணத்திட்டத்தின் கீழ் எனக்கு வீடு கட்டுவதற்கான உதவி கிடைத்துள்ளது. உங்கள் நிபந்தனைப்படி 500 சதுர அடிக்குக் குறையாத வீட்டினை நான் கட்டவேண்டும். ஆனால் எனக்கு எட்டுப்பிள்ளைகள் உள்ளனர். எனவே இந்த வீட்டைப் பெரிதாகக் கட்டுவதற்கு என்ன செய்யவேண்டும்?**

நீங்கள் உங்கள் குடும்பத்திற்கு வசதியான வீடொன்றைக் கட்டுவதில் எங்களுக்கு ஆட்சேபனை ஏதும் இல்லை. ஆனால் முதலில் 500 சதுர அடிக்குரிய வீட்டினை நாங்கள் தரும் நிதியைப் பயன்படுத்தி கட்டிக்கொள்ளுங்கள். அதனைக் கட்டிமுடித்து முழுத் தவணைக் கொடுப்பனவுகளையும் பெற்றுக்கொண்ட பின்னர் உங்கள் சொந்தப்பணத்தினை முதலீடு செய்து நீங்கள் விரும்பிய அளவிற்கு உங்கள் வீட்டைப் பெரிதாகக் கட்டலாம். அதற்கேற்ற வகையில் வீட்டின் வரைபடத்தை முதலில் தயாரித்து மாவட்ட திட்டப் பொறியியலாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

**என்னுடைய கிராமம் யுத்தத்தினால் கடுமையாகப் பாதிக்கப்பட்டள்ளது. 60 சதவீதத்திற்கும் அதிகமான வீடுகள் அழிவடைந்த நிலையிலுள்ளன. ஆனால் உலகவங்கியின் வீட்டுத்திட்டத்தின் கீழ் இந்தக் கிராமம் தெரிவு செய்யப்படவில்லை. நாங்கள் என்ன செய்ய வேண்டும்?**

பிரதேச செயலகங்களில் சேகரித்து வைக்கப்பட்டுள்ள தரவுகளின் அடிப்படையிலேயே கிராமங்கள் தெரிவு செய்யப்படுகின்றன.




கடுமையாகப் பாதிக்கப்பட்ட கிராமங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுகின்றது. சிலவேளைகளில் உங்கள் கிராமத்தைவிட பாதிப்பு அதிகமாக உடைய கிராமங்கள் முதலில் தெரிவுசெய்யப்பட்டிருக்கலாம். அல்லது உங்கள் கிராமத்தில் நிகழ்ந்த சேதங்கள் பற்றிய தரவுகளில் தவறுகள் ஏதேனும் நேர்ந்திருக்கலாம். எவ்வாறாயினும் இந்த விடயம் பற்றி நீங்கள் பிரதேச செயலாளருடன் தொடர்பு கொண்டு அவரின் ஆலோசனையைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

**எனது கணவன் யுத்த அனர்த்தத்தின்போது இறந்து விட்டார் எனக்குப் பத்துப் பிள்ளைகள் உள்ளனர். 5 ஏக்கர் காணியும் உள்ளது. வீட்டுத்திட்டத்தின் கீழ் எனக்கு வீடுகட்டும் வசதியும் கிட்டியுள்ளது. ஆனால் எனது பிரச்சினை உயிவாழ்வதற்கான உணவு, உடை போன்றவையாகும். இவற்றைப் பெறுவதற்கு உங்களால் உதவமுடியுமா?**

அபிவிருத்தியின் அடித்தளமாக விளங்குவது மீள்குடியேற்றம். இடம்பெயர்ந்தவர்கள் மீள்குடியேறுவதனை ஊக்கப்படுத்தும் வகையில் அவர்கள் தமது வீடுகளை நிர்மாணிப்பதற்கு உதவுவதே எமது திட்டத்தின் நோக்கம். மீள் குடியேறிய கிராமங்களிலே பெருமளவு வளங்கள் உள்ளன. குறிப்பாக ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஏக்கர் கணக்கான நிலம் இருந்தபோதும் அவை உரிய முறையில் பயன்படுத்தப்படவில்லை. உங்கள் கிராமத்தில் மனித வளமும் நிலவளமும் நீர்வளமும் நிறையவே உண்டு. முயற்சி மட்டுமே உங்களுக்கு வேண்டியது. உங்களைப் போன்றவர்களுக்கு உதவுவதற்கெனப் பல நிறுவனங்கள் மாவட்ட மட்டத்தில் செயற்படுகின்றன. உங்களுக்குத் தேவையான உதவிகளைப் பெறுவதற்காக பிரதேச செயலாளர் ஊடாக உங்கள் மாவட்ட அரசாங்க அதிபரை நீங்கள் அணுகலாம்.

"வாழும் வீட்டுக்கொரு கன்னிப்பெண்

வைக்கோற் போருக்கொரு கன்றுக்குட்டி"

# வரலாற்றுப் பதிவுகள்



ஆயிலியடி கிராமத்தில்



ஆயிலியடி கிராமத்தில்



முள்ளிப்பொத்தானை கிராமத்தில்



ஔவைநகர் கிராமத்தில்



சாம்பல்தீவு கிராமத்தில்




வரோதயநகர் கிராமத்தில்



ஔவைநகர் கிராமத்தில்



விகாரகம கிராமத்தில்

# குறைந்த செலவில் வீடு நிர்மாணம்

எமது நாட்டில் குறைந்த செலவினில் வீடுகளை நிர்மாணிக்கும் முயற்சிகள் பல்வேறு காலகட்டங்களில் பல்வேறு வடிவங்களில் பரீட்சித்துப் பார்க்கப்பட்டன. இத்தகைய முயற்சிகள், மக்களின்



நேரடிப் பங்களிப்பின்மை, அவர்களின் தேவைகளும் வாழ்க்கைத் தராதரமும் கவனத்திலெடுக்கப்படாமை, அவர்களுடன் கலந்தாலோசிக்காது தீர்மானங்கள் உயர்மட்டத்தில் மேற்கொள்ளப்பட்டமை போன்ற காரணங்களினால் தோல்வியில் முடிவுற்றன.

வடக்கு கிழக்கு வீடமைப்பு மீள்நிர்மாணத்திட்டம் 2004 ஆம் ஆண்டிலே உலக வங்கியின் நிதி உதவியுடன் குறைந்த செலவில் வீடமைக்கும் திட்டம் ஒன்றினைப் பரீட்சார்த்தமாக அறிமுகப்படுத்தியது.

யுத்தத்தினால் வீட்டினை இழந்த, நலிவுற்றோருக்கான இந்த வீட்டுத்திட்டம், ''பயனாளி தனக்கான வீட்டினைத் தானே அமைக்கும்'' கருதுகோளை அடித்தளமாக்கொண்டு வடிவமைக்கப்பட்டதாகும். இந்த பரீட்சார்த்த திட்டம் பெருவெற்றி அளித்ததை தொடர்ந்து வடக்கு கிழக்கில் 31270 வீடுகளை மீள்நிர்மாணம் செய்வதற்கு வடக்கு கிழக்கு வீடமைப்பு மீள்நிர்மாணத்திட்டம் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

இத்திட்டத்தின் கீழ் 2005 ஆம் ஆண்டில் 4902 வீடுகள் மீள்நிர்மாணம் செய்யப்பட்டன. 2006 ஆம் ஆண்டில் சுமார் 11,200 வீடுகளை மீள்நிர்மாணிக்கும் பணி இடம்பெற்றுவருகின்றது.

இந்த திட்ட அமுலாக்கத்தின் பாரிய வெற்றிக்கு அதற்கான சிறப்பான திட்டமிடல், நெறிப்படுத்துகை, நடைமுறைப்படுத்தல், உரிய முறையிலான கண்காணித்தல் எனப் பலகாரணங்கள் துணைநிற்கின்றன.

திட்டத்தின் பொறியற் பிரிவானது பயனாளி, சிக்கனமான முறையிலும் விரைவாகவும் வீட்டினை கட்டிமுடிக்கச் செய்வதற்குப் பல தந்திரோபாயங்களை கையாண்டுவருகின்றது. தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் , மேசன் தச்சுத் தொழிலாளர்கள் மற்றும் பயனாளிகள் ஆகியோருக்கான தொழில்நுட்பக் கைநூல்கள் வழங்கப்படுகின்றன. மேலதிக விளக்கங்கள் தருவதற்காக பயனாளிகளுக்கும் உத்தியோகத்தர்களுக்கும், கிராமப் புனர்வாழ்வுக் குழு உறுப்பினர்களுக்கும் விழிப்பூட்டுதல் கருத்தரங்குகள் ஏற்பாடு செய்யப்பட்டுவருகின்றன. உள்ளூரில் உள்ள தரமான கட்டிடப் பொருட்கள் இனங்காணப்பட்டு நிர்மாணத்திற்காகப் பயன்படுத்தப்படுத்துவதற்கு ஊக்கமளிக்கப்படுகின்றது. பயனாளிகள் கூட்டாக கட்டிடப்பொருட்களைப் பெறுவதற்கும், பணிகளில் ஈடுபடுவதற்கும் தூண்டப்படுகின்றனர். பயனாளிகள் குடும்பத்திலுள்ள ஒவ்வொரு உறுப்பினரும் தமது வீடு நிர்மாணத்திற்காக உற்சாகத்துடன் உழைப்பதனால் மிகச் சிக்கனமான முறையில் தமது வீட்டினைக் கட்டிமுடிப்பதில் அவர்கள் வெற்றி கண்டுள்ளனர்.

இவ்வாறு சிறப்பாக ஒழுங்கமைக்கப்பட்ட அமைப்பியல் ரீதியான நடைமுறைகளைப் பின்பற்றுவதன் மூலம் வடக்கு கிழக்கு வீடமைப்பு மீள்நிர்மாணத்திட்டம் தனது இரண்டாவது ஆண்டிலும் வெற்றிகரமாகச் செயற்பட்டுவருகின்றது.

# வீடமைப்புத்திட்டத்தில் சுற்றாடல் தாக்கமதிப்பீடு

சுற்றாடல் தாக்க மதிப்பீடு என்பது அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் பாதுகாப்பு என்ற இரண்டு விடயங்களை உள்ளடக்கியதாகும். இவை நாணயத்தின் இரு பக்கங்கள் போன்றவை. அபிவிருத்தி நடவடிக்கைகளின் போது சுற்றாடலில் ஏற்படும் சாதகமான மற்றும் எதிர்மறையான தாக்கங்கள் இனங்காணப்படுகின்றன. எதிர்மறையான தாங்கங்களைக் குறைப்பதற்கும் சாதகமான தாக்கத்தினை அதிகரிப்பதற்கும் சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு நடவடிக்கைகள் துணையாக அமைகின்றன.

சுற்றாடல் மதிப்பீடானது, உயிர் சூழல், உயிரற்ற சூழல், சமூக சூழல் ஆகிய மூன்று அடிப்படை அம்சங்களை ஆய்வு செய்கின்றது. சுற்றாடல் சாத்திய வள அறிக்கையின் சாதக அல்லது பாதகமான அம்சங்களே திட்டத்தின் அங்கீகரத்தினைத் தீர்மானிக்கும் பிரதான காரணிகளாக அமைகின்றன. நேர்ப் திட்டத்தினைப் பொறுத்தவரையில் சுற்றாடல் ஆய்வறிக்கை சாத்தியமற்றதாக இருக்குமிடத்து அக் கிராமம் தெரிவிலிருந்து நீக்கப்படும். அல்லது சுற்றாடல் தாக்கத்தைக் குறைப்பதற்கான மாற்று ஏற்பாடுகள் முன்வைக்கப்படும். வடக்கு கிழக்கில் சுற்றாடல் சமநிலையைப் பேணுவதனையிட்டு பின்வரும் மூன்று நிலைகளில் நேர்ப் திட்டம் ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றது.

1.உள்ளூர் கட்டிடப் பொருட்களான மணல், மரம், செங்கல், சீமேந்துக்கல், ஓடு, கருங்கல் ஆகியவற்றின் இருக்கை, அவற்றை எமது தேவைக்காகப் பயன்படுத்தும்போது ஏற்படும் சுற்றாடல் தாக்கம். தாக்கங்களைத் தவிர்ப்பதற்கு அல்லது குறைப்பதற்கு எத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் ஆகியவை பற்றியது.

2.கழிவு முகாமைத்துவத்தினைக் கடைப்பிடித்தல்.

கட்டிட இடிபாடுகளின் கழிவு, கட்டிட நிர்மாணப்பணிகளின் போது ஏற்படும் கழிவு, வீட்டில் தேங்கும் திண்மக் கழிவு, கழிவுநீர் முகாமை, மலசல கழிவு முகாமை, மலசலகூட நிர்மாண விதிமுறைகளைப் பேணுதல்.



3. பிரதான தாக்கங்களைக் கணிப்பீடு செய்யும் நடவடிக்கையின் கீழ் கிராமத்திலுள்ள இயற்கை வளங்களின் தன்மை, இருக்கை, சரணாலயம் பற்றிய தகவல், கிராமிய காடு அதன் தன்மை தாக்கம் பற்றிய ஆய்வு, வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களின் இருக்கை மற்றும் தன்மை, கடல் மற்றும் கடல் சார்ந்த வளம் அதன் மீது ஏற்படும் தாக்கம், கண்டல் தாவரம் சதுப்புநிலங்களில் ஏற்படும் தாக்கம், ஏரிகள் மற்றும் நீர் நிலைகளில் ஏற்படும் தாக்கம் மற்றும் அச்சுறுத்தல் போன்றவை பற்றியதும்.

சுற்றாடல் மதிப்பீட்டு அறிக்கையில் குறிப்பிடப்படும் சுற்றாடல் தாக்கங்கள், அவற்றைக் குறைப்பதற்காக எடுக்கப்பட்ட வேண்டிய நடவடிக்கைகள் பற்றி வடக்கு கிழக்கின் சகல மாவட்டங்களிலும் பயிற்சிக் கருத்தரங்குகள், மற்றும் விழிப்புணர்வூட்டும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

## தகவல் கல்வித் தொடர்பாடல் ஆலோசகர்கள் நியமனமும் திட்டத்தில் அதன் தாக்கமும்

தகவல் கல்வி தொடர்பாடல் நடவடிக்கைகளை முனைப்பாக முன்னெடுக்கும் நோக்குடன் வடக்கு கிழக்கிலுள்ள ஒவ்வொரு மாவட்டத்திற்கும் தகவல் கல்வித் தொடர்பாடல் ஆலோசகர் ஒருவரும் உதவி ஆலோசகர் ஒருவரும் உலக வங்கியின் அங்கீகரத்துடன் 10.03.2006 ஆம் திகதியிலிருந்து நியமிக்கப்பட்டனர்.இவர்களின் பணிகளை ஒருங்கிணைப்பதற்காக திட்டத் தலைமை அலுவலகத்திற்கும் ஓர் ஆலோசகரும் உதவி ஆலோசகரும் நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் கடமைகளைப் பொறுப்பெடுத்து செயற்படத்தொடங்கியதன் பயனாக தகவல் கல்வித் தொடர்பாடல் மற்றும் நிர்மாண நடவடிக்கைகளில் பாரிய முன்னேற்றத்தினை அவதானிக்க முடிவதாக உலக வங்கியின் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. கட்டம் IIன் போது(2006) ஒவ்வொரு மாவட்டத்திலும் மேற்கொள்ளப்பட்ட பயிற்சியளித்தல் நடவடிக்கைகளின் போது பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் 138 பேர் அவற்றில் கலந்து கொண்டுள்ளனர். இனங்காணப்பட்ட 536 கிராமங்களில் த.க.தொ ஆலோசகர்கள், பிரதேசமட்ட தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள், மாவட்டத்திலுள்ள சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஆகியோருடன் இணைந்து செயற்பட்டதன் மூலம் 24,400 பங்குபற்றுநர்களுடன் கலந்துரையாடியுள்ளனர்.



2005 ஆம் ஆண்டில் 1224 ஆக இருந்த குறைகேள் தீர்வு முறைகள் 2006 ஆண்டு ஜுன் மாதத்தில் 7800 ஆக அதிகரித்துள்ளன. இத்தகைய முன்னேற்றங்கள் வ.கி.வீ.மீ.திட்டத்தின் வளம்பொருந்திய வெளிப்படைத் தன்மையினைச் சுட்டி நிற்கின்றன. இருவழி அணுகுமுறையை உறுதிப்படுத்துவதான சமுதாய கலந்துரையாடல் தந்திரோபாயம் கடைப்பிடிக்கப்பட்டமை இவ்வெற்றிக்குக் காரணமாகுமென அவ்வறிக்கையில் மேலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## வீடமைப்பு மீள்நிர்மாணத்திட்டத்திற்கு நன்றிகூறும் ஹேரத் பண்டா குடும்பம்



கிளிநொச்சி மாவட்டம், கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவில் வசிக்கும் ஹேரத் பண்டாவின் மனைவி கண்களில் நீர்வழிய பின்வருமாறு கூறகின்றார்.

“நானும் எனது கணவரும் மிக நீண்டகாலமாகவே கண்டாவளையில் வசித்து வருகின்றோம். எங்களுக்கு இங்கு மக்களினால் எந்த விதமான அச்சுறுத்தல்களும் இருக்கவில்லை. ஆனால் கொடிய யுத்தம் எனது இரண்டு பிள்ளைகளின் உயிர்களைக் குடித்துவிட்டது. வீடு நிர்மூலமாக்கப்பட்டுவிட்டது. நாங்கள் நிர்க்கதியாகி நின்றோம்.

வடக்கு கிழக்கு வீடமைப்பு மீள்நிர்மாணத்திட்டத்தின் கீழ் எங்களுக்கு எமது வீட்டை மீள்நிர்மாணம் செய்வதற்கான உதவி கிடைத்துள்ளது. இழப்புக்களின் மத்தியில் இந்த உதவி பேருதவியாகும். எங்களுக்கு நிரந்தரமான வீடு ஒன்றினை அமைத்துக் கொள்வதற்கு உதவும் நேர்ப் திட்டத்திற்கு நாங்கள் என்றும் நன்றியுடையோம்.’’

## எனது குஞ்சுக்கும் ஒரு கூடு

வவுனியா காயாங்குளம் கிராமம் காடுமண்டிக்கிடக்கிறது. அந்தக்கிராமத்தில் வாழும் நேசக்கமலம் என்ற சிறுபெண்ணின் இடுப்பில் முளைத்ததுபோல ஒரு குழந்தை அட்டையாக ஒட்டிக்கொண்டிருக்கிறது. அவளும் அந்தக் குழந்தையை கீழே விடுவதாகஇல்லை. அதுபற்றி அவளிடம் வினாவியபோது அவள் சொன்னாள்,

“இந்தக் குழந்தைக்காகவே நான் உயிர்வாழ்கிறேன். 1990 ஆம் ஆண்டு இடம்பெற்ற யுத்தம் காரணமாக இந்தக்கிராமத்தை விட்டு நாங்கள் இடம்பெயர்ந்து சென்றோம். அகதிமுகாம்களில் அல்லல்பட்டோம். அமைதி உடன்படிக்கை கைச்சாத்தானதன் பின்னரே நாங்கள் இந்தக் கிராமத்திற்குத் திரும்பினோம். சிறு குடிசை அமைத்து எங்கள் வாழ்க்கையை ஆரம்பித்தோம்.



இந்தச் சிறு குடிசையிலேயே இந்தக் குழந்தை பிறந்தது. பிறந்த நாள்முதல் இதற்கு நேர்ந்த ஆபத்துக்கள் சொல்லில் அடங்கா. குழந்தையைத் தனியே விடமுடியாது. பல சந்தர்ப்பங்களில் காட்டு விலங்குகள் குழந்தையைக் கடித்துக் குதற முற்பட்டன. இரவிலே குழந்தையயைப் படுக்கவைக்க முடியாது. பாம்பு, தேள் போன்ற விஷஜந்துக்கள் குழந்தையயைத் தீண்ட முற்பட்டன. குழந்தை குடிசைக்கு வெளியே நடமாட முடியாது. கல்லும் காட்டு முள்ளும் குழந்தையை கீறிக்கிழித்தன. இதனால் நான் குழந்தையை எந்தச்சந்தர்ப்பத்திலும் கீழேவிடுவதில்லை.

இப்பொழுது வடக்கு கிழக்கு வீடமைப்பு மீள்நிர்மாணத்திட்டத்தின் கீழ் வீடுகட்டுவதற்கான உதவி எனக்குக் கிடைத்துள்ளது.வீட்டுவேலைகள் யாவும் நிறைவடைந்துவிட்டன. எனது குழந்தையுடன் கல்வீடொன்றில் வசதியாகப் பயமின்றி வாழப்போகின்றேன் என்பதனை நினைக்கும்போது மிக்க மகிழ்ச்சியாக இருக்கிறது. எனக்கு ஒரு வீடுமாச்சு எனது குஞ்சுக்கு பாதுகாப்பான ஒரு கூடுமாச்சு’’ என அந்தப்பெண் சிரித்துக் கொண்டே கூறினாள்.

**‘‘வீட்டின் எஜமானனே மிகப்பெரிய வேலைக்காரன்’’**

# சுனாமி வீடமைப்பு மீள்நிர்மாணத்திட்டம் கட்டம் I

## சுனாமி அனர்த்தமும் வீடமைப்பு மீள்நிர்மாணமும்.

மீள்நிர்மாணம் மற்றும் அபிவிருத்திக்கான முகவரகத்தின் (RADA) அனுசரணையுடன் வடக்கு கிழக்கு வீடமைப்பு மீள்நிர்மானத்திட்டத்தின் கீழ் வடக்குக் கிழக்கு சுனாமி வீடமைப்பு மீள்நிர்மாணப் பிரிவானது 2005ஆம் ஆண்டிலிருந்து செயற்பட்டு வருகின்றது. சுனாமிப் பேரலையின் தாக்கத்திற்கு உட்பட்ட மட்டக்களப்பு , அம்பாறை , முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய ஐந்து மாவட்டங்களில் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிரந்தர வீடமைப்பு வசதியை வழங்கும் ஒரு திட்டமாக இது விளங்குகிறது.

இத் திட்டத்தின் கீழ் மேற்குறிப்பிட்ட ஐந்து மாவட்டங்களிலும் பாதிக்கப்பட்ட 15 பிரதேச செயலர் பிரிவில் உள்ள 31,790 வீடுகளுக்கான மீள்நிர்மாணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறன. இதில் 17,723 முழுமையாகச் சேதமடைந்தும் 13,122 பகுதியாகச் சேதமடைந்ததுமான வீடுகளை மீள்நிர்மாணிப்பதற்கு உதவிகள் வழங்கப்படுகின்றன. இதில் 5813 முழுமையான சேதமடைந்த வீடுகளுக்கு வடக்குக் கிழக்கு சுனாமி வீடமைப்பு மீள்நிர்மாணப் பிரிவானது வேறு அரசசார்பற்ற நிறுவனங்களுடன் இணைந்து 5813 முழுமையாகச் சேதமடைந்த வீடுகளுக்கு நிதிப்பங்களிப்பு வழங்கி வருகிறது.

இத்திட்டத்தின் கீழ் முழுமையாகச் சேதமடைந்த வீடு மீள்நிர்மாணத்திற்காக 250,000 ரூபாவும் பகுதியாகச் சேதமடைந்த வீடு மீள்நிர்மாணத்திற்காக 100,000 ரூபாவும் நன்கொடையாக வழங்கப்படுகிறது.


அத்துடன் இணைந்த நிதிப் பங்களிப்பாக 250,000 ரூபாவும்வழங்கப்படுகிறது. வடக்குக் கிழக்கு சுனாமி வீடமைப்பு மீள்நிர்மாணப் பிரிவானது திட்டச் செயற்பாடுகளை கண்காணிப்பதுடன் நடைமுறைப்படுத்தும் செயன்முறைகளையும் மேற்கொண்டு வருகிறது. இதனை விட மட்டக்களப்பு , அம்பாறை ஆகிய இரண்டு மாவட்டங்களிலும் மேலதிகமாக ஆசிய அபிவிருத்தி வங்கி , ஜேர்மனிய அபிவித்தி வங்கி ஆகிய இரண்டு வங்கிகளினதும் உதவியுடன் நான்கு பிரதேச செயலர் பிரிவுகளில் ஒருங்கிணைக்கும் பணியையும் மேற்கொண்டு வருகிறது.

இத்திட்டத்தின் கீழ் இதுவரை 12,866 பகுதியாகச் சேதமடைந்த வீடுகளும் 1405 முழுமையாகச் சேதமடைந்த வீடுகளும் பூரணப்படுத்தப்பட்டுள்ளன.

### இணைந்த நிதிப்பங்களிப்புடனான சுனாமி வீடு மீள்நிர்மாணம்

| மாவட்டம் | முழுமையான சேதம் | | பகுதியான சேதம் |
|---|---|---|---|
| | முழுப்பங்களிப்பு | இணைந்த நிதிப்பங்களிப்பு | |
| அம்பாறை | 3,443 | 421 | 6,302 |
| மட்டக்களப்பு | 8,571 | 3,225 | 4,777 |
| முல்லைத்தீவு | 3,357 | 2,088 | - |
| யாழ்ப்பாணம் | 2,352 | 79 | 2,043 |
| மொத்தம் | 17,723 | 5,813 | 13,122 |

**முற்றாகச் சேதமடைந்த சுனாமி வீடுகள் மீள்நிர்மாண முன்னேற்றம் 15.06.2006 ல் உள்ளபடி**




### சுனாமி வீடமைப்பு மீள்நிர்மாணத் திட்டம் கட்டம் I

முற்றாகச் சேதமடைந்த வீடுகள் மீள்நிர்மாணம் 31.07.2006 இல் உள்ளபடி முன்னேற்றம்

| மாவட்டம் | மொத்தம் | அத்திவாரம் முடிவுற்றோர் | ஓடு வரை முடிவுற்றோர் | வீடு கட்டி முடித்தோர் |
|---|---|---|---|---|
| அம்பாறை | 3,443 | 3,287 | 2,486 | 308 |
| மட்டக்களப்பு | 8,571 | 8,571 | 6,033 | 810 |
| முல்லைத்தீவு | 3,357 | 2,006 | 1,038 | 263 |
| யாழ்ப்பாணம் | 2,352 | 2,023 | 362 | 24 |
| மொத்தம் | 17,723 | 15,887 | 8,881 | 1,405 |





**சுனாமிப்பேரலை காரணமாக முல்லைத்தீவு மாவட்டத்தில் அழிவுற்றுப்போன இயற்கையும் இல்லிடமும்**


**வெளியீடு : வடக்கு கிழக்கு வீடமைப்பு மீள்நிர்மாணத்திட்டம்**
**பிரதம செயலாளர் செயலகம்**
**உட்துறைமுக வீதி , திருகோணமலை**
**தொலைபேசி : 026 -2224853, 026 -2227161**
**தொலைநகல் : 026 -2224854**
**மின்னஞ்சல் : pdnehrp@sltnet.lk**